# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதிவிசேஷமானது

අංක 1770/12 - 2012 අගෝස්තු 07 වැනි අඟහරුවාදා - 2012.08.07

*1770/12 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், களுத்துறை பிரதேச செயலளார் பிரிவில், கஜுதூவவத்த சிறு பிரிவில், நாகொடை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக் கப்பட்ட 2011.07.03 ஆந் திகதி க. 4317 ஆம் இலக்க இறுதி இடக்கிடப்பியல் வரைபடத்தில் காட்டப்பட்ட காணித் துண்டுகளுக்காக 2011.08.12 ஆந் திகதிய 1718/ 26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் என்னால் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் துண்டு இல. 119 இன் விஸ்தீரணம் 0.0420 ஹெக்டயார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நில அளவைத் திணைக்களத்தினால் 2012.05.17 ஆம் திகதி தயாரிக்கப்பட்டுத் திருத்தப் பட்ட காணித் துண்டுகளுக்கான விபரப் பட்டியலின் பிரகாரம் இக் காணித் துண்டின் விஸ்தீரணம் 0.0042 ஹெக்டயார் ஆக இருத்தல் வேண்டுமென இத்தால் அறியத் தருகின்றேன்.

சிறிசோம லொக்குவிதான,
பிரதேச செயலாளர்,
களுத்துறை.

பிரதேச செயலகம்,
களுத்துறை,
2012.08.03.

08-612

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல. : வ/18/81/2007.

2008.08.20 ஆந் திகதிய 1563/ 10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் பகுதி 1 இல் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், வத்தளை பிரதேச செயலாளர் பிரிவில், ராகம் பத்துவ சிறுபிரிவில் உள்ள, திக்கோவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள, ஆரம்ப வரைபட இல. 3654 இல் காட்டப்பட்ட இரண்டு (02) காணித் துண்டுகளின் மேலதிக விபரங்கள் பின்வருமாறு :-

01. **துண்டு இல. 83**
காணியின் பெயர் : திக்கோவிட்ட வத்தை அல்லது ஹோட்டல் வத்தை ; விபரம் : வீட்டுத் தோட்டம், 30-40 வருடங்கள் வயதுடைய 150 தென்னை மரங்கள் 2, நிரந்தரக் கட்டிடங்கள் மற்றும் மலசல கூடம் ஒன்று உள்ளது; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : பெகாஸ்சஸ் ரிவ் ஹோட்டல் மற்றும் மேலும் பலர், புனித மரியாள் வீதி, திக்கோவிட்ட, ஹெந்தல, வத்தளை ; விஸ்தீரணம் : 3.1601 ஹெக்டயார்ஸ்.

02. **துண்டு இல. 84**
காணியின் பெயர் : திக்கோவிட்ட வத்தை அல்லது ஹோட்டல் வத்தை ; விபரம் : சதுப்பு நிலம் ; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : பெகாஸ்சஸ் ரிவ் ஹோட்டல் மற்றும் மேலும் பலர், புனித மரியாள் வீதி, திக்கோவிட்ட, ஹெந்தல, வத்தளை ; விஸ்தீரணம் : 0.8951 ஹெக்டயார்.

சந்திமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
வத்தளை.

பிரதேச செயலகம்,
வத்தளை,
2012.07.25.

08-626